

தலைமைச் செயலகத்தில் அமைச்சர் சி.வி.கணேசனை நேபாளம் மற்றும் இலங்கை கட்டுமான தொழிற்சங்கங்கள் மற்றும் வேலையளிப்பவர் கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள் சந்தித்து தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்டுவரும் பல்வேறு நல வாரியங்கள் குறித்தும், தங்களின் நாடுகளில் அவற்றை செயல்படுத்துவது குறித்தும் நேற்று முன்தினம் (10.12.2025) கலந்துரையாடினர். இந்நிகழ்வின்போது தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் பொன்குமார், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை செயலாளர் கொ.வீரராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் சி.அ.ராமன் மற்றும் தொழிலாளர் நலத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு அரசின் சார்பில், மகாகவி பாரதியார் அவர்களின் 144 – வது பிறந்தநாளை முன்னிட்டு, நேற்று (11.12.2025) சென்னை காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், முனைவர் இரா.பாஸ்கரன், வி.ஜி.சந்தோசம் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

# பொருநை அருங்காட்சியகம் இறுதிக் கட்டப் பணிகள்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு – தங்கம் தென்னரசு ஆய்வு செய்தனர்!

நெல்லை, டிச. 12 -

திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 20.12.2025 அன்று நெல்லையில் 56.57 கோடி ரூபாயில் கட்டி முடிக்கப்பட்ட பொருநை அருங்காட்சியகம் திறப்பு உள்பட பல்வேறு திட்டப்பணிகளை துவக்கி வைக்கிறார்கள்.

இதனைத் தொடர்ந்து பாளையங்கோட்டை வட்டம் குலவணிகர் கிராமம் பொருநை அருங்காட்சியக இறுதி கட்ட பணிகளை நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என். நேரு, நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தங்கம் தென்னரசு ஆகியோர் (09 12 2025 )அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

நெல்லை மாவட்டம் ரெட்டியார்பட்டி மலைப் பகுதியில் ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை ஆகிய பகுதிகளில் அகழாய்வில் எடுக்கப்பட்ட பொருட்களை காட்சிப்படுத்தும் வகையில் 56.57 கோடி ரூபாய் மதிப்பில் பொருநை அருங்காட்சியகம் கட்டப்பட்டு பணிகள் முடிந்த நிலையில் அதனை அழகுபடுத்தும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இந்த அருங்காட்சியகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 20.12.2025 அன்று திறந்து வைக்கிறார்கள்.

வருகிற 20 ந்தேதி காலை சுமார் 10 மணி அளவில் முதலமைச்சர் அவர்கள் பொருநை இல்லத்தை திறந்து வைத்து பார்வையிடு கிறார்கள்.பின்னர் அரசு மருத்துவகல்லூரி மைதானத்தில் நடக்கும் அரசு விழாவில் 30 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் 16 முடிவுற்ற திட்டப்பணிகளை துவக்கி வைக்கிறார்கள். மேலும் இதனை தவிர்த்து அரசுமருத்துவக்கல்லூரி கூடுதல் கட்டிடத்தை திறந்து வைத்து அரசு மருத்துவக்கல்லூரி வளாகத்தில் நூலகத்திற்கான அடிக்கல் நாட்டுகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

அப்போது மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார்,நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ, நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல், முன்னாள் அமைச்சர் மைதீன் கான், முன்னாள் எம்பி ஞானதிரவியம், மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ்,உள்பட பலர் இருந்தனர்.

### தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில்

# மாற்றுக் கட்சியினர் 150 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – வே.ஜெயபாலன் முன்னிலையில்!

தென்காசி, டிச. 12 -

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த சுமார் 150 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண் டனர்.தென்காசி தெற்கு மாவட்டம் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் கழகத்தில் இணைந்த அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

தென்காசி தெற்கு மாவட்ட திமுக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் 07.12.2025 அன்று கடையநல்லூரை சேர்ந்த ராஜா முகமது தலைமையில் சுமார் 150 பேர்கள் பல்வேறு கட்சிகளிலிருந்து விலகி கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி முன்னிலையில் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

முன்னதாக கழகத்தில் இணைந்த அனைவரையும் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன் வரவேற்றார். அதனைத் தொடர்ந்து அவர்கள் அனைவருக்கும் கழக இருவண்ண வேட்டியை கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வழங்கினார்.

இந்நிகழ்வில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா

வெற்றி கொண்டான், தென்காசி தொகுதி பார்வையாளர் டாக்டர் கலை கதிரவன், மாவட்ட முன்னாள் பொறுப்பாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் மா. செல்லத்துரை, மாநில விவசாய அணி இணை செயலாளர் எஸ். அப்துல்காதர், மாவட்ட துணை செயலாளர்கள் கனிமொழி, கென்னடி, மாவட்ட பொருளாளர் ஷெரீப்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகச்சாமி,முத்துப்பாண்டி, சேக்தாவூது, சேசுராஜன்,பொதுக்குழு உறுப்பினர்கள் சாமித்துரை, ரஹீம், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் இஸ்மாயில்,முத்துவேல், கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான்,அரசு வழக்கறிஞர் வேலுச்சாமி,ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், சீனித்துரை, அழகுசுந்தரம், திவான் ஒலி,ரவிசங்கர், ரமேஷ், சுரேஷ், ஷேக்முகமது, ஜெயா, சொக்கம்பட்டி மணிகண்டன், ஜெயக்குமார், முன்னாள் ஒன்றிய செயலாளர் காசிதர்மம் துரை,நகர செயலாளர்கள் சாதிர், வெங்கடேசன், அப்பாஸ், பீரப்பா, பேரூர் செயலாளர் கள் சுடலை, குட்டி, முத்தையா, ராஜராஜன், பண்டாரம், முத்து, மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணராஜா, முருகன், இசக்கிப்பாண்டியன், கோமதிநாயகம், இஞ்சி இஸ்மாயில், மாவட்ட அணி துணை அமைப்பாளர் கள் ஐவேந்திரன் தினேஷ், சுப்பிரமணியன்,சூர்யா மணி என்ற ஈஸ்வரன்,ராமராஜ், முத்துசுப்பிர மணியன், பிரேம்குமார்,வழக்கறிஞர் கண்ணன்,உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்ததாவது.

நயினார் நாகேந்திரனே பா.ஜ.க விற்கு புதிதாக குடி வந்தவர்.அவர் சேர்வதற்கு முன்பு இருந்த தலைவர்களால் கூட தமிழ்நாட்டில் பா.ஜ.க.வை கொண்டுவர முடியவில்லை. வாஜ்பாய்,அத்வானி ஆகியோர்களாலும் முடியவில்லை. மோடியும் பலமுறை வந்தார். அவராலும் முடியவில்லை.நயினார் நாகேந்திரன் புதிதாக பா.ஜ.க.விற்கு குடியேறி வந்திருக்கிறார். எத்தனை நாள் அவர் அங்கு குடியிருப்பார் என்பதை பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும்.அவர் சொல்வது எடுபடாது. தமிழ்நாடு பெரியாரின் பூமி.அயோத்தி பாராளுமன்ற தொகுதியிலேயே பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.தோற்றது. நயினார் நாகேந்திரன் தமிழகம் அயோத்தியாக மாறும் என்று சொல்வதை பார்த்தால் பா.ஜ.க தமிழ்நாட்டில் எடுபடவே படாது என்பதை அவரே ஒத்துக் கொண்டு ஸ்டேட்மென்ட் கொடுத்ததற்கு சமம். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “எல்லோர்க்கும் எல்லாம்” என்று எண்ணக் கூடியவர்.கல்விக்கு முன்னுரிமை கொடுப்பவர். அயோத்தியில் பா.ஜ.க தோற்கடிக்கப்பட்டு விட்டது. தமிழகத்திலும் ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டு தான் வருகிறது. என்ற கருத்தை தான் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் சுட்டிக்காட்டினார் என்றார்.

இவ்வாறு கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி தெரிவித்தார்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதி தெற்கு ஒன்றியம் மேல்மங்கலம் தனியார் மண்டபத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்கு சாவடி மற்றும் தமிழ்நாடு தலைகுனியாது பிரச்சாரம் குறித்து சரவணகுமார் எம்எல்ஏ தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. உடன்பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முன்னாள் எம்.எல்.ஏ. முத்துராமலிங்கம், ஒன்றிய துணை செயலாளர் பாஸ்கர் அய்யன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### முட்டம், கருங்குழி,ஊராட்சிகளில்

# “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி,” பிரச்சாரம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்து சிறப்புரை!


கடலூர், டிச. 12 -

காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற தொகுதி, முட்டம் கிராமத்தில் தமிழக முதல்வர் அறிவுறுத்தலின் பேரில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற பிரச்சாரம், 10.12.2025, புதன் கிழமை, காலை 8 மணியளவில் நடைப்பெற்றது.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

கடலூர் கிழக்கு மாவட்டப் பொருளாளர் எம். ஆர்.கே.பி.கதிரவன், ஒன்றிய செயலாளர் ஜெயபாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசியதாவது;

வாக்கு சாவடி முக வர்கள் வீடு வீடாகச் சென்று அரசின் சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்ய வேண்டும்.



தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்காளர்களை சந்தித்து அரசின் சாதனையை பற்றி விரிவாக கூற வேண்டும் . மகளிர்க்கான இலவச பேருந்து பயணம் ,மகளிர் உரிமை தொகை , உள்ளிட்ட மகளிர் திட்டங்களையும் . கல்லூரி மாணவர்களுக்கு வெற்றிக்கு அடித்தளமாக உள்ள நான் முதல்வன் திட்டத்தை பற்றியும் மாணவர்கள் தீய பழக்கங்களில் இருந்து விடுபட துணை முதலமைச்சர் விளை யாட்டு துறையில் கவனம் செலுத்துவதால் அதிகம் பேர் விளை யாட்டில் சாதனை படைக்கின்றனர். நமது தொகுதியில் தேத்தாம்பட்டு பகுதியில் மினிவிளையாட்டு அரங்கம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இவ்வாறு நமது அரசு மகளிர் ,மாணவர்கள், உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் பயன்பெறும் வகையில் பல்வேறு சாதனைகளை செய்து வருகிறது .ஆகவே கட்சியினர் அரசின் சாதனைகளை மூன்று மாதத்திற்க்கு துண்டு பிரசுரங்களை வீடுகள் தோறும் விநியோகம் செய்ய வேண்டும். புது புது கம்பெனிகள் அதாவது புது கட்சிகள் வருகின்றன. மீண்டும் நாம் ஆட்சி அமைக்க பொறுப்பாளர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும் என பேசினார்.

பின்னர் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதி கருங்குழி கிராமத்தில் நடைப்பெற்ற என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பிரச்சார கூட்டத்திற்கு மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். ஒன்றிய கழக செயலாளர் வி.சிவக்குமார் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டங்களில் தொகுதி பொறுப்பாளர் விஜயன், ,ஒன்றிய கழக செயலாளர்கள் அ.முத்துசாமி, தங்க ஆனந்தன், பேரூர் கழக செயலாளர் கணேசமூர்த்தி அவைத் தலைவர் ராமமூர்த்தி. ஆசிரியர் மனோகரன், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன்,நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், நகர மன்ற தலைவர் சு.சிவக்குமார், பேரூர் செயலாளர் கே.வி.பி.சங்கர், பேரூராட்சி தலைவர் கோகிலா குமார், துணை தலைவர் ஆர்.ராமர், விடுதலை சேகர், பாலவிநாயகம், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஜாபர் அலி, துணை அமைப்பாளர் கௌதமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### ஜோலார்பேட்டையில்

# ‘என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி’ பரப்புரை!

## கா.தேவராஜ் – ம.அன்பழகன் சிறப்புரை!

திருப்பத்தூர், டிச. 12 -

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை நகரம், 108 வது வாக்குச்சாவடியில் நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது என் வாக்குச்சாவடி வெற்றி_ வாக்குச்சாவடி தேர்தல் பரப்புரையில் மாவட்ட செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைத்தார். ஜோலார்பேட்டை நகர செயலாளர் ம.அன்பழகன் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் நகர கழக நிர்வாகிகள் மகேந்திரன், இந்திராபெரியார்தாசன், வசந்த குமார், பாஸ்கர், சம்பத், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மு.க.அருள்நிதி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பி.சுதா, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு அணித்தலைவர் காளியப்பன், மாவட்ட ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர் முகிலன்,

வார்டு செயலாளர் முரளி, நகர மன்ற உறுப்பினர் மாலதிரமேஷ்பாபு வாக்குச்சாவடி முகவர் செங்குட்டுவன், BDA சௌந்தர், வார்டு கழக நிர்வாகிகள் ரமேஷ்பாபு, கார்த்திக், மணிவண்ணன், ரேவதி, மணவாளன், ராஜா, அண்ணாதுரை, பார்த்திபன், பன்னீர்செல்வம், ரஜினி, மணிவண்ணன், பணிமுத்து, மகாலட்சுமி, காமராஜர், துளசிநாதன் மற்றும் கழக முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

### செஞ்சி கிழக்கு ஒன்றியம் சிங்கவரம் ஊராட்சியில்

# ‘என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி’ பரப்புரை!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, டிச. 12 -

என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரையை தி.மு.க. தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் சிங்கவரம் ஊராட்சியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி தேர்தல் பரப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது.

செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமையில்நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடிதிமுகவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் தேர்தல் பரப்புரையை தொடங்கி வைத்துதிராவிட மாடல் அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் அடங்கிய துண்டு பிரசுரங்களை ஒவ்வொரு வீடாகவழங்கி பரப்புரையை மேற்கொண்டனர்.

அப்போது திராவிட மாடல் ஆட்சியின்திட்டங்களான மக்களை தேடி மருத்துவம்,மகளிர் விடியல் பயணம்,புதுமைப் பெண், தமிழ் புதல்வன் திட்டம்,தாயுமானவர், அன்பு கரங்கள் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துரைத்து எதிர் வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் முதலமைச்சரின் கரத்தை வலுப்படுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீண்டும் முதலமைச்சர் ஆக்கிட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்துஒவ்வொரு வீட்டிலும் திராவிட மாடல் அரசின் சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை தி.மு.க. பூத் கமிட்டி உறுப்பினர்கள் வழங்கி தேர்தல் பரப்புரையை மேற்கொண்டனர்.

நிகழ்ச்சியில்மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் குணசேகரன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரங்கநாதன்,ஒன்றிய அவைத் தலைவர் வாசு,மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பழனி, ஊராட்சி நிர்வாகிகள் மணிவண்ணன், பாண்டியன் முருகேசன், மாதேஸ்வரன்,வாக்குச்சாவடி முகவர்கள் ,பூத் ஏஜென்ட் நிர்வாகிகள்,பூத் கமிட்டி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



விளாத்திகுளம் வட்டம் மீனாட்சிபுரம் கிராமத்தில் நேற்று முன்தினம் சின்னமுனியசாமி என்பவரது இல்லத்தில் குளிர்சாதனப்பெட்டி வெடித்து வீட்டில் உள்ள பொருள்கள் சேதம் அடைந்தது தகவல் அறிந்த விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்க்கண்டேயன் பார்வையிட்டு நிதியுதவி வழங்கினார்.உடன் விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, இம்மானுவேல், கிளைச் செயலாளர் கண்ணன், விளாத்திகுளம் பேரூராட்சி முன்னாள் வார்டு உறுப்பினர் புஷ்பராஜ், உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.